**செய்தி வெளியீடு எண் :1099** **நாள்: 03.07.2022**

# செய்தி வெளியீடு

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கீழ்க்காணும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் 2022-23 ஆம் கல்வியாண்டிற்கு தகுதி வாய்ந்த பட்டயப்படிப்பு முடித்து, பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்கு பகுதி நேர பி.இ. பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1) அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர் – 641 013
2) அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம் – 636 011
3) அரசினர் பொறியியற் கல்லூரி, திருநெல்வேலி – 627 007
4) அழகப்பசெட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, காரைக்குடி – 630 004
5) தந்தை பெரியார் அரசினர் பொறியியற் கல்லூரி, வேலூர் – 632 002
6) அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர் – 635 104
7) கோயம்புத்தூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, கோயம்புத்தூர் – 641 014
8) தியாகராஜர் பொறியியற் கல்லூரி, மதுரை – 625 015

| | | |
|---|---|---|
| 1) | தகுதி : | விண்ணப்பதாரர் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாளன்று பட்டயப்படிப்பு முடித்து, இரண்டு ஆண்டுகள் முழுமையாக நிறைவு பெற்றிருக்க வேண்டும். மேலும் விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் பணிபுரிகிறவராகவோ அல்லது இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்திருந்தவராகவோ இருக்க வேண்டும். |
| 2) | விண்ணப்பிக்கும் முறை : | விண்ணப்பதாரர் www.ptbe-tnea.com என்ற இணையதள வாயிலாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும் |
| 3) | விண்ணப்பப்படிவம் கிடைக்கும் நாள் | ஆன்லைன் மூலமாக விண்ணப்பங்கள் பதிவு செய்யும் நாள்<br>துவங்கும் நாள் : 04.07.2022<br>முடிவுறும் நாள் : 03.08.2022 |
| 4) | பதிவுக்கட்டணம் | பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர் Debit Card / Credit Card / Net Banking இணையதளம் வாயிலாக செலுத்தலாம் |
| 5) | விவரங்கள் | இணையதள வசதி இல்லாத விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தினை இணையதளம் வாயிலாக பதிவு செய்வதற்கு, தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை (TFC) மையத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம். அனைத்து TFC மையங்களிலும் போதிய அளவில் கொரானா தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>இந்த கல்வியாண்டில் பகுதிநேர பி.இ. பட்டப்படிப்பு கலந்தாய்வு இணையதளத்தின் வாயிலாக மட்டுமே நடைபெறும்.<br><br>மேலும் விவரங்கள் அறிய www.ptbe-tnea.com என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.<br><br>தொடர்பு எண் : 0422-2590080, கைபேசி எண். 9486977757 |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in